


tamilmakkalkurall@gmail.com

# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி






## தமிழகம் முழுவதும் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

## திருச்சி கலெக்டர், எஸ்.பி. நள்ளிரவில் மோட்டார் சைக்கிளில் சென்று சோதனை

சென்னை, 22 ஜூன் 2024: தமிழகம் முழுவதும் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயத்தை குடித்து உயரிழந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இன்று காலை பலி எண்ணிக்கை 54-ஆக உயர்ந்துள்ளது. 100-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாகியது.

இதையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்கால சமுதாயத்தை பாதிக்கும் போதைப்பொருள் விற்பனையை தடுக்க முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார். இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவை அடுத்து தமிழகம் முழுவதும் கள்ளச்சாராய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, கடலூர் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் விற்பனை தடுக்கும் பொருட்டு, மாவட்டம் முழுவதும் அதிரடிசோதனை நடத்த போலீசாருக்கு, எஸ்.பி., ராஜாராம் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, மதுவிலக்கு அமல்பிரிவு டி.எஸ்.பி., சவுமியா மேற்பார்வையில் கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், நெய்வேலி, சேத்தியாதோப்பு, பண்ருட்டி,திட்டக்குடி ஆகிய 7 சப் டிவிஷன்களில் அதிரடி மதுவிலக்கு சோதனையில்போலீசார் ஈடுபட்டனர். மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்கள் போலீசார் நடத்திய சோதனையில், 119 பேர் மீது வழக்கு பதிந்து, 23 பேரை கைது செய்துள்ளனர். மொத்தம் 205 லிட்டர் சாராயம், புதுச்சேரி மாநில 143 மதுபாட்டில்கள், 523 டாஸ்மாக் மதுபாட்டில்களை பறிமுதல் செய்துள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கள்ளச்சாராய வேட்டையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். திருவண்ணாமலை மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவு (கலால்) டிஎஸ்பி ரமேஷ்ராஜ் தலைமையில், மாவட்டம் முழுவதும் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.





மேலும், அந்தந்த பகுதிகளில் சம்மந்தப்பட்ட சப் டிவிஷன் டிஎஸ்பிக்கள் தலைமையில், தனிப்படைகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடந்த அதிரடி சோதனையில், 16 பெண்கள் உள்பட மொத்தம் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 680 லிட்டர் கள்ளச்சாராயம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவித்துள்ளனர். மேலும், ஜவ்வாதுமலை பகுதியில் நடந்த சோதனையில், பேரல்களில் பதுக்கி வைத்திருந்த சுமார் 1300 லிட்டர் கள்ளச்சாராய ஊறல் கைப்பற்றப்பட்டுள்ளது. அதோடு, கள்ளச்சாராய விற்பனையில் தொடர்ந்து ஈடுபடுவோரை கண்காணிக்கும் பணி நடந்து வருகிறது.

தஞ்சை மாவட்ட மதுவிலக்கு டிஎஸ்பி முருகதாசன் உத்தரவின் பெயரில், பட்டுக்கோட்டை மதுவிலக்கு ஆய்வாளர் ஜெயா தலைமையில் போலீசார் பட்டுக்கோட்டை அருகே அத்திவெட்டி, தம்பிக்கோட்டை, மேலக்காடு, வடகாடு மற்றும் சின்னாத்தங்காடு உள்ளிட்ட பகுதிகளில் அதிரடியாக ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வின் ஒரு பகுதியாக பட்டுக்கோட்டை அருகே உள்ள தம்பிக்கோட்டை மற்றும் சின்னத்தங்காடு பகுதியில் 5 பேரல்களில் 150 லிட்டர் ஊரல் சாராயம் அதாவது கள்ளச்சாராயம் தயாரிப்பதற்கு முந்தைய படிநிலையில் மூலப் பொருள்கள் கலந்த கலவையான ஊரல் சாராயம் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இந்த சாராய உற்பத்தியில் ஈடுபட்ட சின்னாத்தங்காடு பகுதியைச் சேர்ந்த நாகராஜ் (78) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி துறையூர் வட்டம் பச்சைமலை அருகில் உள்ள நெசக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக கிடைத்த தகவலின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வருண்குமார் நேற்றிரவு பச்சை மலைப் பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அங்கு இருந்த 250 லிட்டர் கள்ளச்சாராயத்தை கீழே ஊற்றி அழித்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களை அழைத்து கள்ளச்சாரயத்தின் தீமைகளை எடுத்து கூறியதை தொடர்ந்து அக்கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் மாவட்ட ஆட்சியர் முன்பாக மது போதைக்கு எதிராக இனி ஒருபோதும் எங்கள் கிராமத்தில் கள்ளச்சாராய உற்பத்தி நடக்காது அதனை அனுமதிக்க மாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஏராளமான காவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மூன்று கிலோமீட்டர் தூரம் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், எஸ் பி வருண்குமார் இருவரும் இரு சக்கர வாகனத்தில் சென்று சாராய ஊறலை அழித்தது குறிப்பிடத்தக்கது.

இது போல் தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதியில் காவல்துறையினர், மாவட்ட நிர்வாகத்தினர் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். ■

## டாக்டர். எஸ். ஜெய்சங்கர் இலங்கையில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை

## துவக்கி வைத்தார், 'அக்கம்பக்கத்தினர் முதன்மையானவர்கள் ' கொள்கையை வலியுறுத்துகிறார்

சென்னை, 22 ஜூன் 2024: வெளிவிவகார அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் வியாழக்கிழமை இலங்கை சென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார். 6 மில்லியன் டாலர்கள் பங்களிப்புடன் இந்தியாவால் நிதியளிக்கப்பட்ட கூட்டாக நிறுவப்பட்ட கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை அவர்கள் இருவரும் இணைந்து வெளியிட்டனர். இந்த விஜயத்தின் போது, ஜெய்சங்கர் தனது அண்டை நாடுகளுடன் நட்பு மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகளை வளர்ப்பதற்கான அதன் 'அக்கம்பக்கத்தினர் முதன்மையானவர்கள்' கொள்கையின் கீழ் இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கு தனது முதல் வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்ட ஜெய்சங்கர், 'எக்ஸ்' என்ற சமூக ஊடக தளத்தில் பதிவிட்டு, 'புதிய காலத்தில் எனது முதல் வருகைக்காக கொழும்பில் வந்தேன். இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் எஸ்.தொண்டமான் ஆகியோருக்கு அன்பான வரவேற்பு வழங்கியமைக்கு நன்றி. தலைமையுடனான எனது சந்திப்புகளை எதிர்பார்க்கிறேன். எங்கள் அண்டை நாடு முதல் மற்றும் சாகர் கொள்கைகளுக்கு இலங்கை மையமாக உள்ளது.

மற்றொரு பதிவில், வெளியுறவு அமைச்சர், 'கடல் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் (எம்ஆர்சிசி) மெய்நிகர் ஆணையம் மற்றும் கோல் வீட்டுத் திட்டங்களின் கீழ் 154 வீடுகளை மெய்நிகர் ஒப்படைப்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் இணைந்தார்' என்று எழுதினார்.

ஜெய்சங்கர் மற்றும் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஆகியோர் மின்சாரம், எரிசக்தி, இணைப்பு, துறைமுக உள்கட்டமைப்பு, விமானப் போக்குவரத்து, டிஜிட்டல், சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, கல்வி மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஒத்துழைப்புக்கான வழிகள் குறித்து விவாதித்தனர். கலந்துரையாடலைத் தொடர்ந்து, டாக்டர் எஸ். ஜெய்சங்கர் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மற்றும் நட்புறவு உறவுகளை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டார்.

அதைத் தொடர்ந்து, ஜெய்சங்கர், இலங்கைப் பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து, வளர்ச்சி மற்றும் இணைப்பு முயற்சிகள்



மூலம் இந்தியாவின் வலுவான ஆதரவை மீண்டும் வலியுறுத்தினார்.

முன்னதாக, வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கு முதலில்' கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், இந்த விஜயம், இலங்கைக்கு மிக நெருக்கமான கடல்சார் அண்டை நாடான மற்றும் தேவைப்படும் காலங்களில் முக்கிய பங்காளியாக இருக்கும் இந்தியாவின் உறுதியான உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த பயணம் இணைப்பு திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பை துரிதப்படுத்தும்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# நெல்லையப்பர் கோவில் தேர் வடம் அடுத்தடுத்து அறுந்தது ஏன்? சட்டசபையில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு விளக்கம்



சென்னை, 22 ஜூன் 2024: நெல்லையப்பர் கோவில் தேர் வடம் அடுத்தடுத்து அறுந்தது ஏன்? என்பது தொடர்பாக அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு சட்டசபையில் இன்று விளக்கமளித்தார்.

சட்டசபையில் இன்று கேள்வி நேரத்தின் போது சட்டமன்ற துணைத்தலைவர் கு.பிச்சாண்டி கேள்வி எழுப்பி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

எனது கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் சோமாஸ்பாடி கிராமத்திலிருக்கின்ற மாரியம்மன் கோயிலை புதுப்பிக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் கோரிக்கையை அமைச்சர் இந்த மானிய கோரிக்கையில் அறிவிப்பாக அறிவிப்பார்களா என்பதையும், அதேபோல நெல்லையப்பர் கோயிலில் தேர் இழுக்கும் போது கயிறு சரி இல்லை என்று அங்கிருப்பவர்களும், பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளிலும் செய்தி வந்தது. அந்த தேருக்கு இரும்பு சக்கரம் மாற்றப்பட்டு இருக்கிறது. திருவண்ணாமலை திருக்கோயிலில் தேரை இழுப்பதற்கு இரும்பு சங்கிலிகள் இருப்பதை போல எல்லா தேரோட்டங்களிலும் இரும்பு சங்கிலிகளை அமைத்து அதை இழுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று கேட்டார்.

இதற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில் அளித்து பேசியதாவது:

ஆசியாவில் இருக்கின்ற மிகப்பெரிய தேர்களில் மூன்றாவது தேர் திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் தேராகும். 28 அடி நீள, அகலம் கொண்ட 80 அடி உயரமுள்ள அந்த தேரானது திருக்கோயில் 9 நாள் உற்சவத்தின் இறுதி நாளாக நேற்றைக்கு தேர் வடம் பிடித்து இழுக்கின்ற நிகழ்ச்சி நடைபெற்றது. திருத்தேர் சக்கரத்தில் முன்பகுதியில் வைக்கப்பட்ட தேர் கட்டை அகற்றப்பட்டு பின்னாலிருந்து நெம்புகோல் தருவதற்கு முன்பாகவே பக்தர்கள் பக்தி பரவசத்தால் ஒட்டுமொத்தமாக வடத்தை பிடித்து இழுத்ததன் காரணமாக தேர் வடம் அறுந்துள்ளது.

திருக்கோயில் தேரோட்டத்தின் போது மாற்று வடம் தயார் நிலையில் எப்போதும் இருக்கும். அந்தவகையில், அதற்கு மாற்றாக திருச்செந்தூர் தேரின் வடம் தயாராக வைக்கப்பட்டு இருந்தது. உடனடியாக அந்தத் தேர் வடத்தை இணைத்து வெற்றிகரமாக நேற்று இரவு 9:30 மணி அளவில் திருத்தேர் நிலையை அடைந்தது.

எல்லா தேர்களுக்கும் தேரின் உடைய இணைப்பு பகுதிக்கு இரும்புச் சங்கிலி இருக்கும். பக்தர்கள் அனைவரும் வடம் பிடிக்க வேண்டி இருப்பதால் தேரை இழுப்பதற்கு வடம் எப்பொழுதும் கயிற்றினால் தான் நீளமாக இழுத்துச் செல்ல முடியும் என்ற காரணத்தினால் தான் அனைத்து திருத்தேர்களிலும் வடம் அதிக எடை கொண்ட கயிற்றினால் தான் பின்னப்படுகின்றது. நெல்லையப்பர் திருக்கோயில் தேரானது 450 டன் எடை கொண்டதாகும். நேற்றைய தினம் நடைபெற்ற தேரோட்டத்திற்கு முன்பாக தீயணைப்புத்துறை மற்றும் பொதுப்பணித்துறையினர் தேருக்கும், வடத்திற்கும் உறுதி சான்றிதழ் அளித்த நிலையில் தான் தேரோட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உறுப்பினர் தெரிவித்தபடி, எந்தெந்த திருத்தேர்களுக்கெல்லாம் சங்கிலிகள் தேவையோ, அங்கெல்லாம் பொருத்தப்பட்டு இருக்கிறது.

மேலும், அவர் கோரிய சோமாஸ்பாடி மாரியம்மன் திருக்கோயில் இந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும். கடந்த மூன்று ஆண்டுகளில் 8,962 திருக்கோயில்களுக்கு மண்டல குழு மற்றும் மாநில வல்லுநர் குழுக்களால் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கிய ஆட்சி முதலமைச்சர் தலைமையிலான ஆட்சியாகும். விழுப்புரம் மாவட்டம், பூவரசங்குப்பம், லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் திருத்தேரானது 150 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சீட்டனஞ்சேரி, காளீஸ்வரர் திருக்கோயில் திருத்தேரானது 80 ஆண்டுகளுக்கு பிறகும் இந்த ஆட்சியில் தான் தேர்வீதி உலா நடத்தப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார். ■

# பலி எண்ணிக்கை 55 ஆக உயர்வு: 3 பேர் மீது கொலை வழக்கு கள்ளச்சாராயம் குடித்து வீட்டிலேயே இருந்த 55 பேர் மீட்கப்பட்டு சிகிச்சை: கலெக்டர் தகவல் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு தப்பிச் சென்றவர் பலி




சென்னை, 22 ஜூன் 2024: கள்ளக்குறிச்சி சேஷசமுத்திரம் பகுதியை சேர்ந்த சுப்பிரமணி என்பவர், 2 தினங்களுக்கு முன்பாக கள்ளச்சாராய பாதிப்பு தொடர்பாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிகிச்சைக்குப் பிறகு உடல்நிலை சற்றே தேறிய நிலையில், யாரிடமும் தகவல் சொல்லாமல் அவர் மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், இன்று காலையில் அவருக்கு மீண்டும் வயிற்று வலி ஏற்பட்டு அவதிப்பட்டுள்ளார். உடனடியாக குடும்பத்தினர் சங்கராபுரம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனால், சிகிச்சை பலன்ன்றி சுப்பிரமணி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் கிராமத்தில், கள்ளச்சாராயம் குடித்து உடல்நிலை பாதிக்கப்பட்டவர்கள் கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் பரமசிவம், கல்யாணசுந்தரம் ஆகியோர் இன்று சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதையடுத்து பலி எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது. இந்த 4 மருத்துவமனைகளிலும் பாதிக்கப்பட்ட 110க்கும் மேற்பட்டோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 25 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு சிறப்பு மருத்துவ குழுவினர் கண்காணிப்பில் 24 மணி நேர சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சையில் உள்ள மற்ற நபர்களில் சிலரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, கருணாபுரத்தில் விஷச்சாராயம் குடித்து வெளியூர்களுக்கு சென்ற சிலருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் வேலூர் மற்றும் சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி மருத்துவமனை தலைவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

விஷ முறிவுக்கான மருந்து போதிய அளவில் இருப்பு உள்ளது. சிகிச்சையில் இருப்பவர்களுக்கு அனைத்து வித பரிசோதனைகளும் மேற்கொள்கிறோம். உரிய மனநல ஆலோசனைக்கு பிறகே வீட்டுக்கு அனுப்புவோம் என்று கூறினார்.

இதையடுத்து கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் பிரசாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் 140 பேர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். 56 சிறப்பு மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கவலைக்கிடமாக இருந்த 5 பேரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் அருந்தி வீட்டிலேயே இருந்த 55 பேர் மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கள்ளச்சாராய புழக்கம் இருந்த 20 இடங்களில் மருத்துவ குழுவினர் தொடர் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். விஷ சாராயத்தால் உயிரிழந்த 39 பேரின் உடல்கள் தகனம் மற்றும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அரசின் ஆணைப்படி பாதிக்கப்பட்டு இறந்த அனைவருக்கும் இழப்பீடு வழங்கப்படும். கள்ளக்குறிச்சி விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி விசாரணை நடைபெற்று வருகிறது. நேற்று வரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 6 பேர் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். இந்த விவகாரம் தொடர்பாக 3 பேர் மீது போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கள்ளச்சாராய விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 8 பேரில் ராமர், சின்னதுரை, ஜோசப் ராஜா மீது கச்சிராப்பாளையம் காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. சாராயத்தில் மெத்தனால் கலந்தவர்கள் என்ற அடிப்படையில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் பா.ஜ.க. ஆர்ப்பாட்டம் மதுரையில் 'பாடை' கட்டி போராடிய எச். ராஜா உள்பட 300 பேர் கைது

சென்னை, 22 ஜூன் 2024: தி.மு.க. அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் பா.ஜ.க. சார்பில் போராட்டம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து தற்போது வரை 55 பேர் வரை பலியாகி உள்ளனர். மேலும் 100-க்கும் அதிகமானவர்கள் மருத்துவ சிகிச்சையில் உள்ளனர். கள்ளச்சாராயத்தை தடுக்க தி.மு.க. அரசு தவறி விட்டது என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டி உள்ளார். இந்த சூழலில் கள்ளச்சாராய சம்பவத்தை கண்டித்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தது.

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து மரண சம்பவத்தை கண்டித்து மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு உள்ள திருவள்ளூர் சிலை அருகே பா.ஜ.க. சார்பில் மதுரை மாநகர் மாவட்ட தலைவர் மகா சுசீந்திரம் தலைமையில் தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் இதற்கு போலீசார் அனுமதி மறுத்ததாக கூறப்படுகிறது. இதனால் போலீசாருக்கும், பா.ஜ.க.வினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு




ஏற்பட்டது.

இதற்கிடையில் இறந்தவரை தூக்கி செல்லும் பாடையில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு தமிழக அரசை கண்டித்து சிலர் பாடையை எடுத்து வந்து போராட்டம் நடத்த முயற்சித்தனர். பின்னர் போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினர். இதனால் போலீசாருக்கும் பா.ஜ.க.வினருக்குமிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீசார் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க.வினரை போலீசார் கைது செய்தனர்.

இதுதொடர்பாக தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜ்குமார், கருடகிருஷ்ணன், நவீன், வேல்முருகன், ஓம்சக்தி தனலட்சுமி, ஊடகப்பிரிவு தலைவர் வேல்பாண்டியன் உள்பட 300-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் செய்ய பாஜகவினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனாலும் கூட பாஜகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர். அவர்களை கலைந்தும்படி போலீசார் கூறினர். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. இதையடுத்து பாஜகவினரை போலீசார் கைது செய்ய முயன்றனர். இதனால் பாஜகவினர் மற்றும் போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இருப்பினும் போலீசார் பாஜக நிர்வாகிகளை கைது செய்தனர்.

இதேபோல் தமிழகம் முழுவதும் பா.ஜ.க. வினர் போராட்டம் நடத்தினர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# நெட், சிஎஸ்ஐஆர் யுஜிசி நெட் தேர்வுகள் பா.ஜ.க. முறைகேடுகளால் தான் ரத்து செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு நெட், சிஎஸ்ஐஆர் யுஜிசி நெட் தேர்வுகள் பா.ஜ.க. முறைகேடுகளால் தான் ரத்து



சென்னை, 22 ஜூன் 2024: நீட் முறைகேடு, நெட், சிஎஸ்ஐஆர் யுஜிசி நெட் போன்ற தேர்வுகள் ரத்து ஆனதற்கு பா.ஜ.க. அரசின் முறைகேடுகளே காரணம் என்று காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை குற்றம் சாட்டினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்எல்ஏ இன்று சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

நீட் தேர்வு முறைகேடு, வினாத்தாள் கசிவால் நெட் தேர்வு ரத்து, சிஎஸ்ஐஆர் யுஜிசி நெட் தேர்வு ரத்து போன்ற அகில இந்திய தேர்வுகள் அனைத்தும் ரத்து ஆனதற்கு பா.ஜ.க. அரசின் இயலாமையும் முறைகேடுகளுமே காரணம். பா.ஜ.க. ஆட்சி இருக்கும் வரை இதுபோன்ற முறைகேடுகள் தொடரும் என்று செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டினார்.

மேலும் அவர் பேசும்போது, கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு அரசு முறையான நடவடிக்கைகளை உடனே எடுத்திருக்கிறது. காவல்துறையில் சில குறைபாடுகள் இருந்துள்ளதால் இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளது.

ஆனால் அதனை இந்த அரசு மூடி மறைக்க விரும்பவில்லை. அதனை நியாயப்படுத்தவும் இல்லை. மாறாக குற்றம் நடந்ததையும், கவனக்குறைவையும் ஏற்றுக்கொண்டு, அதற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கையை உடனே எடுத்துள்ளது.

ஆனால் முந்தைய அண்ணா தி.மு.க. ஆட்சியில் தங்கமணி அமைச்சராக இருந்தபோது, இதுபோன்று விஷ சாராய மரணம் நடந்தபோது, அதனை ஏற்றுக் கொள்ளாமல் வேறு காரணங்களால் இறந்தார் என்று பதில் அளித்தார் என்பதையும் மறந்து விடக்கூடாது. குஜராத் மாநிலத்தில் மோடி முதலமைச்சராக இருந்தபோது 200க்கும் மேற்பட்டவர்கள் விஷ சாராயத்தால் இறந்துள்ளனர். இதுபோன்ற நிகழ்வுகள் இந்தியா முழுவதும் நடைபெறுகிறது. அதனை கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு முறையான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்று நாங்கள் சட்டமன்றத்திலேயே வலியுறுத்தி உள்ளோம் என்றும் செல்வப்பெருந்தகை எம்எல்ஏ கூறினார்.

நிகழ்ச்சியில் முன்னதாக, டிடிவி தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தேனி மாவட்டத்தில் உள்ள பழனிச்செட்டிப்பட்டி பேரூராட்சித் தலைவர் வழக்கறிஞர் மிதுன் சக்கரவர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பாண்டீஸ்வரன், சுகன்யா, மலர்கொடி, சந்திரன் ஆகியோர் ஒட்டுமொத்தமாக அ.ம.மு.க.வில் இருந்து விலகி, காங்கிரஸ் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்களுடைய அ.ம.மு.க. உறுப்பினர் அட்டைகளையும் நிகழ்ச்சியில் செய்தியாளர்களிடம் காட்டினார்.

இது குறித்து செல்வப்பெருந்தகை கூறும் போது, இளம் தலைவர் ராகுல் காந்தியின் கரங்களை, இந்தியா கூட்டணியை வலிமைப்படுத்தும் நோக்கத்தில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் முன்னிலையில் தங்களை காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டுள்ள அனைவரையும் வரவேற்று பாராட்டுகிறேன் என்று கூறினார்.

இந்த பேட்டியின் போது, தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், துணைத் தலைவர்கள் கோபண்ணா, சொர்ணா சேதுராமன், பொதுச்செயலாளர் எஸ்.ஏ வாசு, இதாயத்துல்லா உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# சென்னையில் பெண் டிரைவர்கள் இயக்கும் 200 பிங்க் ஆட்டோ: அமைச்சர் கீதா ஜீவன் அறிவிப்பு



சென்னை, 22 ஜூன் 2024: சென்னை மாநகரத்தில் பெண்களின் பாதுகாப்புக்காக பெண் டிரைவர்கள் இயக்கும் 'பிங்க் ஆட்டோ' திட்டம் செயல்படுத்தப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பிறகு, துறை சார்ந்த அறிவிப்புகளை அமைச்சர் கீதா ஜீவன் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது: -

சட்டப்பேரவையில் நேற்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேசினர்.

அதற்கு பதிலளித்த பின்னர் சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு:

சென்னையில் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதுடன், பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 200 பெண் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு தலா ரூ.1 லட்சம் மானியம் வழங்கி 200 இளஞ்சிவப்பு (பிங்க்) ஆட்டோக்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்டு காவல்துறை மூலம் கண்காணிக்கப்படும் வகையில் இந்த ஆட்டோக்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அதேபோல கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்றை மகளிர் நல வாரியம் மூலம் கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள 200 பேருக்கு சுயதொழில் செய்ய தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.1 கோடி மானியம் வழங்கப்படும். தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்தின் மூலம் திருவள்ளூர், கோவை, திருப்பூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 6 அரசுபணிபுரியும் மகளிர்விடுதிகள் ரூ.1 கோடியில் மறுசீரமைக்கப்படும்.

இதுதவிர 6 அரசு சேவை இல்லங்கள் மற்றும் 27 அன்னை சத்யா குழந்தைகள் காப்பகங்களில் தங்கியுள்ள மாணவிகளுக்கு ரூ.1 கோடியில் தற்காப்பு கலை பயிற்சி வழங்கவும், அனைத்து மாவட்டங்களிலும் 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள 451 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ரூ.9 கோடியில் முட்டை உரிப்பான் இயந்திரங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆதரவற்ற முதியோர் நலனுக்காக திருவண்ணாமலை, திருச்செந்தூர், பழனி, நாகூர், வேளாங்கண்ணி, ராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய 7 சுற்றுலா தலங்களில் ரூ.40 லட்சத்தில் முதியோர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் 5,590 குழந்தைகள் மையங்கள் ரூ.55 கோடியில் சீர்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்தப்படும். மேலும் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து உணவு முறைகளை கண்காணிக்க 29,236 அங்கன்வாடி பணியாளர்களுக்கு ரூ.34.50 கோடியில் ஸ்மார்ட்போன்கள் வழங்கப்படும்.

குழந்தைகள் மையங்களில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உயரம் மற்றும் எடையை அளவிடும் 4 வகையான வளர்ச்சி கண்காணிப்பு கருவிகள் ரூ.14.18 கோடியில் புதிதாக மாற்றப்படும்.

சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகளில் ஒன்றான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72 ஆயிரத்தில் இருந்து ரூ.1.20 லட்சமாக உயர்த்தப்படும் என்பன உள்ளிட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் முதன்முறையாக, முழங்கால் காயத்திற்கு சிகிச்சையளிக்க செயற்கை தசைநாணை பயன்படுத்தியிருக்கும் ரேலா மருத்துவமனை



சென்னை, 22 ஜூன் 2024: மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு சாலை விபத்தில் சிக்கிய சென்னையை சேர்ந்த 23 வயதான ஒரு மென்பொருள் துறை பணியாளரான இ மணிகண்டன் என்ற இளைஞருக்கு பல தசைநாண்கள் சேதத்துடன் முழங்கால் மூட்டு காயம் ஏற்பட்டது. சென்னையின் ரேலா மருத்துவமனையில் இன்று அவருக்கு நடத்தப்பட்ட வெற்றிகரமான ஆர்த்ரோஸ்கோபி அறுவைசிகிச்சையின் காரணமாக தமிழ்நாட்டின் மருத்துவ சிகிச்சை வரலாற்றில் செயற்கை தசைநாண்களை பெற்ற முதல் நபர் என்ற பெருமைக்குரியவராக அவர் ஆகியிருக்கிறார். முழங்கால் மூட்டிற்கு உட்புறத்தில் காணப்படுகிற இரு +குறி போன்ற தசைநாண்களை மறுகட்டமைப்பு செய்வதற்காக செயற்கை தசைநாண்களை அறுவைசிகிச்சை நிபுணர்கள் இவருக்கு பயன்படுத்தியிருக்கின்றனர்.

வெவ்வேறு கட்டமாக நடைபெற்ற இந்த இடையீட்டு சிகிச்சையில் ரேலா மருத்துவமனையின் அறுவைசிகிச்சை நிபுணர்கள், வெளியார்ந்த பொருத்துதல் வழியாக நோயாளியின் நொறுங்கிய இடுப்புக்கூடு பகுதியை முதலில் சீரமைத்தனர். அத்துடன் முழங்காலில் சேதமடைந்த வேறுபிற தசைநாண்கள் மற்றும் நரம்புகளில் பழுதை சரிசெய்தனர். இச்சிகிச்சை நடைபெற்றதிலிருந்து மூன்று மாதங்களுக்கு பிறகு யுனைடெட் கிங்டமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை தசைநாண்களை பயன்படுத்தி ஆர்த்ரோஸ்கோபி மருத்துவ செயல்முறையை இந்த இளைஞருக்கு அவர்கள் மேற்கொண்டனர். சுமார் 1 மணி நேரம் நீடித்த இந்த சிகிச்சையின்போது முன்புற கூட்டல்குறி தசைநாண் (ஏசிஎல்) மற்றும் பின்புற கூட்டல்குறி தசைநாண் (பிசிஎல்) என்ற இரு முக்கியமான தசைநாண்களை வெற்றிகரமாக பொருத்தி மறுகட்டமைப்பை மேற்கொண்டனர். தமிழ்நாட்டில் அதிக சிக்கலான முழங்கால் காயங்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையில் இந்த நவீன மேம்பட்ட மருத்துவ செயல்முறை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் சாதனையாக கருதப்படுகிறது.

ஏசிஎல் மற்றும் பிசிஎல் ஆகிய இரண்டு முழங்கால் மூட்டின் முதன்மையான தசைநாண்களாகும். இடுப்பு எலும்புகளை கீழ்ப்புற காலின் எலும்புகளோடு இவை இணைக்கின்றன. இந்த முதன்மையான தசைநாண்களில் இரண்டு அல்லது அதற்கு அதிகமானவற்றில் ஏற்படும் காயங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பல தசைநாண் முழங்கால் காயங்கள் என அழைக்கப்படுகின்றன. அதிக தாக்கம் ஏற்படுத்தும் சாலை விபத்துகள் அல்லது விளையாட்டின்போது ஏற்படும் மோதல் நிகழ்வுகளில் இந்த காயங்கள் பெரும்பாலும் ஏற்படுகின்றன. பல தசைநாண்கள் சேதமடைந்த முழங்கால் காயங்கள் ஏற்பட்ட நோயாளிகளில் நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டு நடமாட்டம் இன்றி இருக்கும் அதிக இடர்வாய்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கடுமையான, தொடர்ச்சியான வலி, நிலைப்புத்தன்மையின்மை மற்றும் பாதிக்கப்பட்டுள்ள நடமாட்டம் ஆகியவை இந்த நோய்ப்பாதிப்புகளுள் சிலவாகும். ரேலா மருத்துவமனையின் தலைமை செயல் அலுவலர் டாக்டர். இளங்குமரன் கலியமூர்த்தி இது தொடர்பாக கூறியதாவது: "நோயாளியின் சொந்த உடலின் ஒரு பகுதியிலிருந்து தசைநாண்களை எடுத்து பிற இடத்தில் பயன்படுத்தும் முறையை அல்லது துண்டிக்கப்பட்ட காலிலிருந்து எடுக்கப்படும் தசைநாண்களை நோயாளிக்கு பொருத்துவது ஆகியவற்றையே இத்தகைய செயல்முறையில் அறுவைசிகிச்சை நிபுணர்கள் வழக்கமாக பயன்படுத்துகின்றனர். இத்தகைய சிகிச்சை அணுகுமுறைகளில், குணமடைந்து மீள்வதற்கான கால அளவுகள் மிக நீண்டதாக இருக்கக்கூடும்; முழுமையான குணமடைதல் ஏற்படாமல் போகலாம்; இதன் காரணமாக பணி அல்லது விளையாட்டிற்கு மீண்டும் திரும்பும் திறனும், வாழ்க்கைத் தரமும் பாதிக்கப்படும். இத்தகைய நிலையில், வழக்கமான பாரம்பரிய முறைகளிலுள்ள குறைபாடுகள் பல அகற்றப்படுவதன் காரணமாக ஒன்றுக்கும் மேற்பட்ட தசைநாண் காயங்கள் ஏற்பட்ட நோயாளிகளுக்கு செயற்கை தசைநாண்களை பொருத்தும் சிகிச்சைமுறை ஒரு வரமாகவே இருக்கிறது."

ரேலா மருத்துவமனையின் மூட்டுமாற்று சேவைகள் துறையின் தலைவரும், எலும்பியல் சிகிச்சையின் கிளினிக்கல் லீடு டாக்டர். அசோக் எஸ். கவாஸ்கர். எலும்பியல் சிகிச்சை, தலை & முதுகெலும்பு அறுவை சிகிச்சை மூத்த ஆலோசகர் டாக்டர் பார்த்தசாரதி சீனிவாசன் முன்னிலையில் ஆர்த்ரோஸ்கோபி மற்றும் விளையாட்டு மருத்துவ பிரிவின் முதுநிலை நிபுணர் டாக்டர். பிரகாஷ் அய்யாதுரை மற்றும் அவரது குழுவினரால் இந்த ஆர்த்ரோஸ்கோபி மருத்துவ செயல்முறை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்த அறுவைசிகிச்சை, சிக்கல்கள் ஏதுமின்றி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து ஒருவார காலத்திற்குள் இந்நோயாளி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. விபத்தின் காரணமாக ஏற்பட்ட மிக சிக்கலான காயம் மற்றும் வலி நிறைந்த காலகட்டத்தை ஒரு மோசமான கனவாக கருதி அதனை மறந்துவிட்டு எவ்வித தடைகளோ, கட்டுப்பாடுகளோ இல்லாமல் அவரது வழக்கமான செயல்பாடுகளை இந்த இளைஞரால் மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பாக டாக்டர். அய்யாதுரை கூறியதாவது: "ஆர்த்ரோஸ்கோபி முறையிலான அறுவைசிகிச்சை புதிதானதல்ல என்றபோதிலும் செயற்கை தசைநாண்களைப் பயன்படுத்தி இத்தகைய குறைவான ஊடுறுவல் உள்ள மருத்துவ செயல்முறை நடைபெற்றிருப்பது இதுவே முதன்முறையாகும். ஆட்டோகிராஃப்ட் மற்றும் அலோகிராஃப்ட் என்ற இரு தசைநாண் ஒட்டுமுறைகளுக்கும் பதிலாக திறன்மிக்க மற்றும் அதிகம் விரும்பப்படும் மாற்று வழிமுறையாக செயற்கை தசைநாண்கள் பயன்பாடு இருக்கிறது. பாரம்பரிய வழிமுறைகளான ஆட்டோஃகிராஃப்ட் மற்றும் அலோகிராஃப்ட்-ல் அவைகளுக்கே உரிய சாதகமற்ற அம்சங்களும், சிரமங்களும் இருக்கின்றன. நோயாளியின் சொந்த உடலிலிருந்து தசைநாண்-ஐ சேகரிப்பதற்காக ஆட்டோகிராஃப்ட்-ல் ஒரு கூடுதல் அறுவைசிகிச்சை செய்யப்பட வேண்டும். இதில் தொற்று மற்றும் பிற சிக்கல்கள் உருவாவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. தசைநாண்கள் சேகரிக்கப்பட்ட இடத்தில் நிரந்தர அசௌகரியம் இருப்பதோடு குறைவான திறனில் இயக்கத்திறனுக்கான சாத்தியமும் இதில் இருக்கும். அதைப்போலவே அலோகிராஃப்ட்-ல் பிறரிடமிருந்து தசைநாண்களைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டும். இவைகள் கிடைக்கப்பெறும் நிலை இந்தியாவில் குறைவாக இருப்பதால் தசைநாண்களைப் பெறுவது பெரும் சிரமமாக இருக்கிறது. அத்துடன், ஒழுங்குமுறை அமைப்பின் கட்டுப்பாடுகள் போன்ற சவால்களும் உண்டு. இவைகளுக்கு மாற்றாக செயற்கை தசைநாண்கள் தயாராக கிடைக்கின்றன. ஒழுங்குமுறை அமைப்புகளின் ஒப்புதல்களும் இவைகளுக்கு தேவைப்படாது. அதைவிட சிறப்பம்சம் என்னவெனில் ஆட்டோஃகிராஃப்ட் மற்றும் அலோகிராஃப்ட் அடிப்படையிலான சிகிச்சை செயல்முறைகள் இருப்பதைப் போல மாதங்கள் அல்லது வாரங்களுக்குப் பதிலாக நோயாளி மீண்டும் குணமடைந்து இயல்பு நிலைக்கு திரும்பும் காலம் வெறும் நாட்கள் என்ற அளவிலேயே இருக்கும்."

போலந்து நாட்டின் மெட்போலினா பிரைவேட் ஹாஸ்பிட்டல்-ன் மருத்துவ இயக்குநர் மற்றும் தலைவர் டாக்டர். க்ளாடியஸ் கொசொவஸ்கி பேசுகையில், "இந்த செயற்கையான தசைநாண்கள், உறுதியான பாலித்தீன் மூலப்பொருளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன; ஆற்றல் மற்றும் நீண்டகாலம் உழைக்கும் திறன் ஆகிய அம்சங்களில் இயற்கையான தசைநாண்களுக்கு இவை நிகரானவை. முழங்காலில் ஏற்படும் அனைத்து காயங்களிலும் சுமார் 15-20% காயங்கள், தசைநாண்களின் மறுகட்டமைப்பு தேவைப்படுகிறதாக இருக்கின்றன. ஒன்றுக்கும் மேற்பட்ட தசைநாண்கள் பாதிப்புடன் கூடிய முழங்கால் காயங்களில், ஆர்த்ரோஸ்கோபி சிகிச்சையில் செயற்கை தசைநாண்களின் பயன்பாடு ஒரு புரட்சிகரமான மாற்றத்தை கொண்டுவருவதாக இருக்கக்கூடும்," என்று சுட்டிக்காட்டினார்.

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் சர்வதேச யோகா தின கொண்டாட்டம் - ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான முன்னெடுப்பு





சென்னை, 22 ஜூன் 2024: சென்னையில் முன்னணிக் கல்வி நிறுவனமாகத் திகழும் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, சர்வதேச யோகா தின விழாவை இன்று சிறப்புடன் நடத்தியது. நாட்டு நலப்பணித்திட்ட அமைப்பு (என் எஸ் எஸ்) மற்றும் தேசிய மாணவர் படை அமைப்பின் (என் சி சி) ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், சென்னையில் உள்ள இந்தியன் ஸ்கூல் ஆஃப் யோகாவின் புகழ்ப் பெற்ற உடற்பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி சிகிச்சையாளரும் முறையான யோகப் பயிற்சி பெற்றவருமான திரு. ஜெய்தேவ் பாலாஜி தலைமையில் யோகப் பயிற்சி குறித்த செயல் விளக்க சிறப்பு அமர்வு நடைபெற்றது.

கல்லூரியின் புதிய மட்டைப் பந்து (கிரிக்கெட்) மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான யோகப் பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் காட்டுவதும், சீரான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவதை ஊக்குவிப்பதுமே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர், டாக்டர் ம.ம.ரம்யா அவர்கள் கூறுகையில், "யோகா என்பது மனம், உடல், ஆன்மா ஆகியவற்றை ஒருமுகப்படுத்தி சமநிலைப்படுத்தும் ஒரு வாழ்க்கை முறையாகும். இன்றைய இந்நிகழ்வு, மாணவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் மேம்படுத்துவதோடு, யோகப் பயிற்சியை நமது அன்றாட நடைமுறைகளில் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தையும் மாணவர்களிடையே ஏற்படுத்தும். யோகப் பயிற்சி உடல், மனம் மற்றும் உணர்வு சார்ந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளதால் இப்பயிற்சிகளின் வழி மாணவர்களின் உடல், மனம் மற்றும் உணர்வு சார்ந்த தன்மைகளை தொடர்ந்து வளர்த்தெடுக்க வேண்டும் என்பதைக் கல்லூரி இலக்காகக் கொண்டுள்ளது.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மாணவர்களுக்குக் கல்வியளித்தல் என்ற நிலைப்பாட்டிற்கு அப்பால் மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படும் ஒரு கல்வி நிறுவனமாக விளங்குகிறது. சர்வதேச யோகா தினம் போன்ற நிகழ்வுகளை நடத்துவதன் மூலம், கல்லூரி மாணவர்களிடையே கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையையும் ஆரோக்கியத்தையும் அதன்வழி தினசரி வாழ்க்கையில் பெறக் கூடிய நன்மைகளையும் முன்னிறுத்துகிறது. மாணவர்களை தொழில்சார் நிலையிலும் தனிப்பட்ட நிலையிலும் வெற்றியாளர்களாகவும் நிறைவானவர்களாகவும் ஆயத்தப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இது போன்ற அணுகுமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# ஹாங்காங்கில் ஒரு துணை நிறுவனத்தை தொடங்கி அதன் வெளிநாட்டு செயல்பாடுகளை விரிவுபடுத்தும் செலகோர் கேஜெட்ஸ் லிமிடெட்

சென்னை, 22 ஜூன் 2024: இந்தியாவின் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் நுகர்வோர் சாதனப் பொருட்கள் சந்தையில் வேகமாக வளர்ந்து வரும் முன்னணி நிறுவனமான செலகோர் கேஜெட்ஸ் லிமிடெட், செலகோர் கேஜெட்ஸ் எச் கே லிமிடெட் என்ற பெயரில் ஹாங்காங்கில், தனக்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனம் நிறுவப்பட்டிருப்பதை பெருமையுடன் அறிவிக்கிறது. இந்த முக்கியமான முன்னெடுப்பு, நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட பெரும் திட்டத்திற்கு இணக்கமானதாக எடுக்கப்படுகிறது. அதன் விநியோகச் சங்கிலி திறன்களை மேம்படுத்தவும் மற்றும் கிடைக்கும் வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளவும் இந்நிறுவனம் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை இந்நடவடிக்கை வலுவாக சுட்டிக்காட்டுகிறது.

ஆசியாவில் எலக்ட்ரானிக்ஸ் துறையின் நுழைவாயிலாக அறியப்படும் ஹாங்காங்கில் நிறுவப்பட்டுள்ள இந்த புதிய துணை நிறுவனம், செலகோர் கேஜெட்ஸ் -ன் முக்கியமான பாகங்களை கொள்முதல் செய்யவும் மற்றும் இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒரு முக்கிய மையமாக செயல்படும். ஹாங்காங்கின் வலுவான தளவாட உள்கட்டமைப்பு மற்றும் தொழில் செயல்பாடுகளுக்கு உகந்த, நட்புறவான சூழலின் காரணமாக அதன் விநியோகச் சங்கிலி செயல்திறனை இது மேலும் மேம்படுத்தும். மேலும் அதன் வாடிக்கையாளர்களுக்கு மிதமான விலைகளில் புதுமையான, உயர்தரமான தயாரிப்புகளை வழங்குவதில் அதன் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இப்புதிய துணை நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.

"ஹாங்காங்கில் எங்களுக்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனத்தை நிறுவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எலக்ட்ரானிக்ஸ் மற்றும் நுகர்வோர் பொருட்கள் சந்தையின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எமது திறனை இது உறுதியாக மேம்படுத்தும்" என்று செலகோர் கேஜெட்ஸ் -ன் நிர்வாக இயக்குநர் திரு. ரவி அகர்வால் கூறினார். "இந்த விரிவாக்கம் முக்கிய சப்ளையர்கள் மற்றும் பார்ட்னர்களுடன் எங்களை இன்னும் நெருக்கமாக நிலைநிறுத்தும். இயக்க ரீதியிலான செயல்நேர்த்தி மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவை மீதான எமது பொறுப்புறுதியை மேலும் வலுப்படுத்துகிறது." என்று அவர் மேலும் கூறினார். முக்கியமான அமைவிடத்தில் ஹாங்காங் இருப்பதும் மற்றும் ஏற்கனவே சிறப்பாக செயல்பட்டு வரும் சப்ளையர் வலையமைப்பும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை நெறிப்படுத்தவும் மற்றும் சேவைக்காக ஆகும் நேரத்தை குறைக்கவும் மற்றும் சந்தையின் போக்குகளுக்கு விரைவாக பதில்வினையாற்றவும் செலகோர் கேஜெட்ஸ் நிறுவனத்திற்கு திறனளிக்கும். ஹாங்காங்கில் நிறுவப்பட்டுள்ள இத்துணை நிறுவனம், பிராந்திய விநியோகஸ்தர்களுடன் நெருக்கமான ஒத்துழைப்பை வளர்க்கும்; வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் மற்றும் முக்கிய நுகர்வு மையங்களில் தடையற்ற சந்தை ஊடுருவலை எளிதாக்கும். செலகோர் கேஜெட்ஸ், தொடர்ந்து அதன் தயாரிப்புகளின் தொகுப்பை புத்தாக்கம் செய்து விரிவுபடுத்தி வரும் நிலையில், ஹாங்காங் - ல் துணை நிறுவனத்தை நிறுவியிருப்பது, மின்னணு நுகர்வோர் சாதனங்கள் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான இந்நிறுவனத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# திரில்லர் பாணியில் வெளியாகி இருக்கும் படம் லாந்தர் இந்த படம் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரும் வெற்றி பெறும்




சென்னை, 22 ஜூன் 2024: தமிழ் சினிமா உலகில் மிக பிரபலமான நடிகராக திகழ்ந்து கொண்டிருப்பவர் விதார்த். தற்போது இவர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'லாந்தர்'. இந்த படத்தை சஜி சலீம் இயக்கியிருக்கிறார். இந்த படத்தில் ஸ்வேதா டோரத்தி, விபின், சஹானா, பசுபதி ராஜ், கஜராஜ், மீனா புஷ்பராஜ், மதன் அர்ஜுனன் உட்பட பல நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். இந்த படத்தை எம் சினிமா ப்ரொடக்சன் பேனரின் கீழ் ஸ்ரீ விஷ்ணு தயாரித்து இருக்கிறார். திரில்லர் பாணியில் வெளியாகி இருக்கும் இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வெற்றி பெற்றதா? இல்லையா? என்பதை பார்க்கலாம்.

கோயம்புத்தூர் பகுதியில் படத்தின் கதை நகர்கிறது. படத்தில் ஏ சி பி அரவிந்தாக ஹீரோ விதார்த் வருகிறார். இவர் ஆரம்பத்திலேயே கள்ளச்சாராயம் தயாரிக்கும் கும்பலை கைது செய்கிறார். இப்படி இருக்கும்போது அடையாளம் தெரியாத ஒரு நபர் சாலையில் செல்பவர்களை கொடூரமாக தாக்கிக் கொண்டிருக்கிறார். இவரைப் பிடிக்க செல்லும் போலீஸ் அதிகாரிகளையும் அந்த நபர் தாக்குகிறார்.

இந்த சைக்கோவை எப்படியாவது கைது செய்ய வேண்டும் என்று அரவிந்துக்கு ஆர்டர் வருகிறது. தீவிரமாக அவரை கண்டுபிடிக்கும் முயற்சியில் விதார்த் இறங்கினார். இறுதியில் அந்த சைக்கோவை விதார்த் பிடித்தாரா? அந்த சைக்கோ யார்? எதற்காக இதையெல்லாம் செய்கிறார்? என்பதே படத்தின் மீதி கதை. போலீஸ் அதிகாரியாக விதார்த் சிறப்பாக நடித்திருக்கிறார்.

அவருடைய மனைவியாக ஸ்வேதாவும் தனக்கு கொடுத்த வேலையை செய்து இருக்கிறார். ஒரு வித்தியாசமான திரில்லர் பாணியில் இயக்குனர் படத்தை கொடுத்திருக்கிறார். ஆனால், அதில் அவர் வெற்றி பெற்றாரா? என்றால் சந்தேகம்தான். காரணம் இதே பாணியில் நிறைய படங்கள் தமிழ் சினிமாவில் வந்திருக்கிறது. கொஞ்சம் வித்தியாசத்தை காண்பித்து இந்த படத்தை விறுவிறுப்பாக கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அதோடு படத்தில் சீரியஸான காட்சிகள் கூட சிரிக்க வைக்கும் அளவிற்கு இருக்கிறது. டெக்னிக்கல், எடிட்டிங் வேலை எல்லாம் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு பிரமாதமாக இல்லை. முதல் பாதி ஓகே. இரண்டாம் பாதி ரொம்ப ரொம்ப சுமார். பிளாஷ்பேக் காட்சிகள் எல்லாம் நன்றாகவே இல்லை. நடிகர்கள் தேர்விலும் இயக்குனர் நிறையவே கவனம் செலுத்தி இருக்கலாம். மொத்தத்தில் ரொம்ப ரொம்ப சுமாரான படமாக லாந்தர் இருக்கிறது.

விதார்த் நடிப்பு சூப்பர் பின்னணி இசை மிக நன்றாக இருக்கிறது, திரில்லர் பாணியில் இயக்குனர் கதையை கொடுத்துள்ளார்.

# தி.மு.க. கவுன்சிலர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் கண்டிப்பாக சிபிஐ விசாரணை தேவை: எடப்பாடி பேட்டி மாநில போலீஸ் விசாரணையில் உண்மை வெளிவராது



சென்னை, 22 ஜூன் 2024: கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என எடப்பாடி பழனிசாமி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக போலீசார் விசாரணை நடத்தினால் உண்மை வெளிவராது என்றும் அவர் கூறினார்.

கள்ளச்சாராயம் குடித்து 55 பேர் பலியாகி இருக்கிறார்கள். அரசின் மெத்தனபோக்கே இதற்கு காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

2வது நாளாக இன்று சட்டசபையிலிருந்து வெளிநடப்பு செய்த பின்னர் சட்டசபை வளாகத்தில் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

கள்ளக்குறிச்சி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும். கேள்வி நேரத்தை ஒத்திவையுங்கள். மக்கள் உயிர் பறிபோயுள்ளது. இந்த விவகாரத்துக்கு முக்கியத்துவம் அளித்து விவாதிக்க வேண்டும் என்று கோரினோம். ஆனால் அதை சபாநாயகர் ஏற்கவில்லை. அதனால் நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

கள்ளச்சாராயத்தால் நாள்தோறும் பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதை விட வேறு என்ன முக்கிய பிரச்சினை இருக்கிறது. அரசு துரிதமாக செயல்பட்டு இருந்தால் பல உயிர்களை காப்பாற்றி இருக்கலாம்.

விஷ முறிவு மருந்து இருப்பு இல்லை என நான் கூறியதற்கு நேற்று புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை பார்த்துவிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் சிகிச்சையில் ஒமிபிரசோல் மருந்து பயன்படுத்துவதாகச் சொன்னார். நான் சொன்னது மெத்தனால் விஷ முறிவுக்கான போமிப்ரசோல். ஆனால் அமைச்சர் ஒமிபிரசோல் என்ற அல்சர் மருந்து பற்றி சொல்கிறார். அந்த மருந்து ஸ்டாக் இருப்பதாக அமைச்சர் கூறுகிறார். நான் சொன்ன மருந்து வேறு. அமைச்சர் மா.சுப்பிரமணியன் சொன்ன மருந்து வேறு.

அது மட்டுமல்ல, கள்ளச் சாராய மரணங்கள் அதிகரிக்க பாதிக்கப்பட்டோர் சிகிச்சைக்கு தாமதமாக வந்ததே காரணம் என்று அமைச்சர் கூறியுள்ளார். இது பச்சைப் பொய்.

முதலில் 3 பேர் இறந்தவுடன் மாவட்ட ஆட்சியர் அரசுக்கு ஆதரவாக ஒரு பேட்டி அளிக்கிறார். அதில் ஒருவர் வயிற்றுப் போக்கு, ஒருவர் வலிப்பு, ஒருவர் வயது மூப்பு காரணமாக இறந்ததாகக் கூறுகிறார். இதனை நம்பி லேசான உபாதைகள் இருந்தவர்கள் கூட மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்திக் கொள்ளாமல் உயிர்கள் பறிபோயுள்ளன. எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி 183 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 55 பேர் பலியாகியுள்ளனர். ஆட்சியர் உண்மையைச் சொல்லியிருந்தால் இத்தனை உயிர்கள் பறிபோயிருக்காது. இதற்கு அரசு தான் காரணம்.

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய விற்பனை வலையில் தி.மு.க. 2 கவுன்சிலர்களுக்கு தொடர்பு இருக்கிறது. அதனால் அரசு அமைக்கும் விசாரணை ஆணையத்தால் உண்மை வெளிவராது. மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றால் நிச்சயமாக சிபிஐ விசாரணை நடத்தப்பட வேண்டும். நாங்கள் இவ்விவகாரத்தில் நீதிமன்றத்தை நாடியுள்ளோம்.

கள்ளக்குறிச்சியில் போலீசாருக்கு தெரிந்தே, கள்ளச்சாராயம் விற்பனை நடந்து வருகிறது. மக்கள் உயிரைப் பறித்த சண்டாளர்களை தண்டிக்க நீதிபதி நல்ல தீர்ப்பை வழங்குவார்.

கள்ளச்சாராயம் குடித்து எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள்? எத்தனை பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எத்தனை பேர் கவலைக்கிடமாக உள்ளனர் என்று அரசு சொல்ல வேண்டியது தானே?

இது பற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டோம். ஆனால் எங்களை அனுமதிக்கவில்லை.

ஆந்திர மாநிலத்தில் மெத்தனால் வாங்கியதாக சொல்கிறார்கள். எனவே அங்கும் விசாரணை நடத்தப்பட வேண்டும். இது இரு மாநில சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே தான் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்கிறோம்.

நான் ஓடி ஒளியவில்லை என்கிறார் முதலமைச்சர். அப்படியானால் சம்பவ இடத்துக்கு போக வேண்டியது தானே? ஏன் போகவில்லை. மக்களுக்கு யார் பாதுகாப்பு. தி.மு.க. கூட்டணியை சேர்ந்தவர்கள் முதலமைச்சரை தாங்கி பிடித்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரச்சினையில் உண்மையை சொல்ல வேண்டாமா? அவர்களுக்கு கூட்டணி, அதிகாரம் தான் முக்கியம். தேர்தல் வரும்போது மக்கள் இவர்களுக்கு தண்டனை வழங்குவார்கள். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.